# பதுளை மாநகர சபை
## பதுளை மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதிவரையும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2011 ஆம் ஆண்டின் செயலாற்றல் தொடர்பான கணக்காய்வு அறிக்கை 2012 செப்தெம்பர் 03 ஆந் திகதி நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2012 மார்ச் 31 ஆந் திகதி வரையில் 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிக் கட்டுப்பாடுகள்

(அ) வைப்புச் செய்யப்பட்டிருந்தும் வங்கியில் செலவு வைக்கப்படாத ரூபா 27,190 பெறுமதியான காசோலை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 188(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999 தொடக்கம் 2010 வரையான காலத்தில் மதிப்பிழந்திருந்த ரூபா 1,154,334 பெறுமதியான 89 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 189 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப் பிரமாணம் 371 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 1998 தொடக்கம் 2011 வரையான காலத்தில் 69 சந்தர்ப்பங்களின் போது பல்வேறு தரப்பினர்களுக்கும் செலுத்தப்பட்ட ரூபா 3,952,759 தொகையான முற்பணம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் 2009 மார்ச் தொடக்கம் 2011 மார்ச் வரையான காலப்பதியில் நிறுத்தி வைத்தல் வரி ரூபா 154,058 தொகையானது உள்நாட்டு இறவைரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 46,264 | 15,429 | 30,835 |
| (ii) | வாடகை | 9,774 | 5,942 | 3,832 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,783 | 1,856 | 847 |
| (iv) | ஏனைய வருமானம் | 5,138 | 3,779 | 1,359 |

### 2.2.2 கடை வாடகை

(அ) சபையானது 58 சந்தர்ப்பங்களில் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கை செய்யப்பட்ட வாடகை தொகையினைவிட குறைவாக மாதாந்த வாடகைத் தொகை அறவீடு செய்திருந்தமையினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த ரூபா 3,502,200 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 15 கடைகளுக்காக 31 மாதங்கள் தொடக்கம் 258 மாதங்கள் வரையான காலப்பகுதிக்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த நிலுவை வாடகையான ரூபா 3,721,369 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 1 மற்றும் 2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபையின் கடைகளுக்கான மாதாந்த வாடகை பிரதான மதிப்பீட்டாளரினால் அல்லது உள்ளூராட்சி சேவையின் மதிப்பீட்டாளரினால் ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு 503 கடைகளுக்காக அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேற்கூறப்பட்ட சுற்றுநிருபத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கடைகளை உப வாடகைக்கு வழங்குதல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் சபையின் 61 கடைகளை வாடகைக்குப் பெற்ற வாடகையாளரினால் அவைகள் வேறு நபர்களுக்கு உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் சபை அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் கையளிப்புக் கட்டணம் அறவிட்டு புதிய வாடகையாளர்களுக்கு கடைகளின் வாடகை உரிமையைக் கையளித்திருந்தது.

(உ) புதிய வியாபாரத் தொகுதியில் இரண்டாவது மாடியினை வாடகைக்கு வழங்கியபோது கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகையை 10% இனால் அதிகரித்து அறவிடப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டு யூலை தொடக்கம் திசெம்பர் வரையான காலத்தில் ரூபா 27,300 தொகையானது இழக்கப்பட்டிருந்தது.

**2.2.3 களியாட்ட வரி**

---------------------------

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இரண்டு சினிமா அரங்குகள் மாநகர சபையின் இறப்பர் முத்திரையின்றி நுளைவுச் சீட்டுப் பத்திரங்கள் விற்பனை

செய்யப்படுவதுடன் 2011 சனவரி தொடக்கம் மே வரையான காலத்திற்காக ரூபா 90,969 தொகையான களியாட்ட வரித்தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 மாடு அறுவைக்கான அனுமதிப்பத்திரம்

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச் சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வனவள மற்றும் சுற்றாடல் அமைச்சரினால் விநியோகிக்கப்பட்ட 2000 நவம்பர் 22 ஆந் திகதிய 1159/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ‘‘அ’’ பட்டோலையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சபை மாடு அறுவைக் கூட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருக்கவில்லை.

### 2.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் நிதி அனுசரணையின் கீழ் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 திசெம்பர் வரை ரூபா 49,581,503 செலவினத்தைச் செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்தவ நிலையம் நகர அபிவிருத்தி அதிகார சபை அங்கீகரித்திருந்த நகர அபிவிருத்தி கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்காமையினால் அந் நிலையத்தை அகற்றி விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானித்த காரணத்தினால் உரிய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ஏற்பட்ட செலவினம் ஒரு செயற்திறனற்ற செலவினத்திற்கு உள்ளாகியிருந்தது.